**செய்தி வெளியீடு எண்: 212** **நாள்:14.03.2020**

## திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – நாள் 14.3.2020

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,**

திண்டுக்கல் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் சிறப்பான நிகழ்ச்சியிலே தலைமையேற்று சிறப்பாக
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நம்மையெல்லாம் சிரிக்க வைத்து, சிந்திக்க வைத்து சிறப்பான கருத்துக்களை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற இந்த மாவட்டதின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு வனத் துறை அமைச்சர்
**திரு. திண்டுக்கல் சீனிவாசன்** அவர்களே!

இந்த மருத்துவமனை வருவதற்கு எனக்கு உதவிகரமாகத் திகழ்ந்து, விரைவாக, துரிதமாக அடிக்கல் நாட்டுகின்ற அளவிற்கு விரைந்து பணியாற்றி மத்திய அரசிடம் பலமுறை சென்று மருத்துவக் கல்லூரி பெறுவதற்கு அடித்தளமாக விளங்கிய
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
**டாக்டர். சி.விஜயபாஸ்கர்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர்
**திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன்** அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் **திருமதி. பா.வளர்மதி** அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் முன்னால் சட்டமன்ற உறுப்பினர் **திரு. பி.கே.வைரமுத்து** அவர்களே!

திண்டுக்கல் மாவட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களே!

முன்னாள் துணை சபாநாயகர், முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திரு.தம்பித்துரை அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.நத்தம் விஸ்வநாதன் அவர்களே!

தேனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ரவீந்திரநாத் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்
**திருமதி. எம்.விஜயலட்சுமி** அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

கழக நிர்வாகிகளே!

பெரியோர்களே, தாய்மார்களே !

விவசாயிகளே, விவசாயத் தொழிலாளர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தான் **1985**ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் அன்றைய மதுரை மாவட்டத்தில் இருந்து பிரித்து திண்டுக்கல் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

வீரம், தியாகம், வளம், ஈகை நிறைந்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க மாவட்டம் திண்டுக்கல் மாவட்டம். **குளிரால் நடுங்கிய மயிலுக்கு தம் பட்டு பீதாம்பரத்தை போர்த்திய** கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான பேகன் இந்த மாவட்டத்தில் இருந்தார் என புறநானூறு கூறுவதாலும், **சுதந்திரப் போராட்ட வீரர்கள்** திரு. சுப்ரமணிய சிவா, விருப்பாட்சி கோபால் நாயக்கர் போன்ற தியாக

சீலர்களைப் பெற்றதாலும், இந்த மண் வள்ளல் தன்மையோடு மட்டுமல்லாமல், வீரமும், தியாகமும் மிகுந்த பூமியாகவும் திகழ்கிறது. மதுரை நாயக்கர் வம்சத்தின் மன்னரான முத்து கிருஷ்ணப்ப நாயக்கரால் திண்டுக்கல் கோட்டை கட்டப்பட்டது. 900 அடி உயரத்தில் திண்டுக்கல் மலை மீது அமைந்திருக்கும் கோட்டையின் எப்பகுதியில் இருந்து பார்த்தாலும் ஊரே தெரியும். இரட்டைச் சுவர்களுடன் கனரக பீரங்கிகளின் தாக்குதல்களையும் சமாளிக்கும் அளவிற்கு இந்தக் கோட்டை பலம் வாய்ந்தது. இந்தக் கோட்டையைக் கைப்பற்ற, விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள், மைசூர் மன்னர்கள், ஆங்கிலேயர் என பலர் போரிட்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்களிடம் வீரமாகப் போராடிய பிறகு, சிவகங்கை ராணி **வீரமங்கை வேலு நாச்சியார், இந்தக் கோட்டையில் எட்டு ஆண்டுகள் தங்கியிருந்தது வரலாறு.**

அனைத்து மதத்தினரின் வழிபாட்டுத் தலங்கள் இந்த மாவட்டத்தில் அதிகமாக உள்ளன. சமூக நல்லிணக்கத்துடன் அனைத்து மதத்தினரும் சகோதர மனோபாவத்துடன் பழகி வருகின்றனர். '**பல பல ரகமாக இருக்குது பூட்டு**' என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திண்டுக்கல் பூட்டை மனதில் வைத்துத் தான் பாடியிருப்பாரோ என்று எண்ணும் அளவிற்கு பல்வேறு ரகங்களில் உற்பத்தியாகும் பூட்டுகளால் திண்டுக்கல் பெருமை அடைகிறது. பூட்டு என்று சொன்னாலே திண்டுக்கல் தான் ஞாபகம் வரும். அவ்வாறு பூட்டுக்குப் பெயர் பெற்ற திண்டுக்கல் மாவட்டத்தில் தான் மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் சுமார் 3,500 சிறு, குறு தொழில் கூடங்களும், 50க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளும் உள்ளன. இந்த மாவட்டத்தில் அதிக நூற்பாலைகள் உள்ளன. அவற்றில் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுகிறது. இது இயற்கை சூழ்ந்த பகுதி. குளிர்ப்பிரதேசப் பகுதியாக இருக்கக்கூடிய கொடைக்கானலைக் கொண்டது திண்டுக்கல் மாவட்டம்.

இத்தகைய பெருமை வாய்ந்த இம்மாவட்டத்தில் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் அதிக அளவில் உள்ளன.

“**மக்களின் சேவையே மகேசன் சேவை**” என மக்கள் நலப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, இந்த மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க மத்திய அரசின்ஆணையை பெற்றுத் தந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் துவங்கப்பட இருக்கும் புதிய அரசு மருத்துவக் கல்லூரியையும் சேர்த்து **11 அரசு மருத்துவக் கல்லூரிகள் ஒரே ஆண்டில் தொடங்கிட** மத்திய அரசின் ஆணையைப் பெற்ற **ஒரே அரசு, சாதனை அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான்** என்பதை இங்கே பெருமையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இந்த அரசு மருத்துவக் கல்லூரியில் 2021–22ஆம் கல்வி ஆண்டு முதல் 150 மாணவர்கள் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து ரூபாய் 327 கோடி மதிப்பீட்டில் இந்த மருத்துவக் கல்லூரி கட்டப்படவுள்ளது. இக்கல்லூரி துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு அலுவலரை நியமனம் செய்தும், கட்டடப் பணிகளுக்காக முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், இப்பணிகளை விரைந்து முடிக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

‘‘**விசையுறும் பந்தினைப் போல் – உள்ளம்**
**வேண்டியபடி செலும் உடல் கேட்டேன்**’’

என்று சொன்னதைச் செய்யும் உடல் வேண்டி உருகுகிறார் மகாகவி பாரதியார் அவர்கள்.

நோயற்ற வாழ்வாகிய செல்வத்தை பெற்றால்தான் அறிவுச் செல்வம் உட்பட அனைத்துச் செல்வங்களையும் எளிதில் பெற முடியும். அதனால் தான், மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழ்நாடு மக்களின் உடல் நலன் பேணும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது. மேலும், தாய்–சேய் நலனை பேணிக்காப்பது, தொற்றும் மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது உட்பட அனைத்திலும் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு அரசின் பொதுச் சுகாதாரத் துறையின் மூலமாக அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தவும், குறிப்பாக தொற்றா நோய்களின் தடுப்பு மேலாண்மையை வலுப்படுத்தவும், ஏற்றத் தாழ்வின்றி சமமான தாய்–சேய் சுகாதார சேவைகளை வழங்கவும் 2 ஆயிரத்து 857 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தத் துவங்கியுள்ளது. சுகாதாரச் சேவைகள் மேலும் செம்மையடைந்து, அதன் பயன்கள் மக்களைச் சென்றடையும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்த சோகையை போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடை அளவை உயர்த்தவும், 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புச் சத்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் எடை குறைவாக பிறக்கின்றபொழுது இறப்பிற்கு உள்ளாவதைத் தடுக்கும் நோக்கில், எங்கள் அரசு, மருத்துவர்களின் நல் ஆலோசனைகளைப் பெற்று இந்தத் திட்டத்தை

அறிமுகப்படுத்தி, குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாகவும், நல்ல எடையோடும் பிறக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது.

- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே தொடர்ந்து முதலிடம் வகித்துக் கொண்டிருக்கின்றோம். இச்சிகிச்சையில் சிறப்பாக செயல்பட்டதற்காக **தொடர்ந்து ஐந்து முறை மத்திய அரசின் விருதினை பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம். திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த இரண்டு கைகளையும் இழந்த திரு.நாராயணசாமி** என்பவருக்கு, இறந்த ஒருவரின் உடலிலிருந்து இருந்து இரண்டு கைகளை எடுத்துப் பொருத்தி **மாற்று அறுவை சிகிச்சை செய்து**, இந்தியாவிலேயே முதன்முறையாக **சாதனை படைத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.** இந்த இரண்டு கைகளும் பொருத்தப்பட்ட பிறகு, அவர் திருமணம் செய்து, தற்பொழுது அவருக்கு குழந்தையும் பிறந்துள்ளது. இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் முன் இது சாத்தியமா? சாத்தியமில்லையா? இது சாத்தியமில்லை என்றால் இப்பொழுது இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் இதை வைத்து அரசியல் செய்து விடுவார் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, அவரை, மருத்துவர்கள் குழுவினருடன் நன்கு கலந்தாலோசித்து தெரிவிக்கக் கேட்டதற்குப் பிறகு, அவரும், மருத்துவக் குழுவும் கொடுத்த ஆலோசனையின்படி, இது சாத்தியம் என்ற காரணத்தினால் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மருத்துவத் துறையில் எப்படிப்பட்ட சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சாதனையைப் படைத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அரசு

மருத்துவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழுஉடல் பரிசோதனைத் திட்டம், அம்மா குழந்தைகள் நல பெட்டகம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. கடந்த காலங்களில் ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றால், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக 2 லட்சம் ரூபாய் வரை மருத்துவ வசதி பெறலாம். இது போதாது என்று மக்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்தது. கூடுதலாக செலவாகின்றபொழுது அந்த ஏழை, எளிய மக்கள் தங்கள் கையிலிருந்து பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது, இதை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்தவுடனே அம்மாவினுடைய அரசு, மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பெறப்படும் மருத்துவ சிகிச்சைக்கான தொகையை 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சமாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றது.
- பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ் சிறக்க, தமிழகம் முழுவதும் 32 மாவட்டங்களிலும் நூற்றாண்டு விழா நடத்திய பெருமை கொண்ட அரசு அம்மாவினுடைய அரசு தான். அந்த நூற்றாண்டு விழாவிற்கு திண்டுக்கல் மாவட்டத்திற்கு நான் வருகை தந்திருந்தபொழுது என்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் நான் பல்வேறு புதிய அறிவிப்புகளை அறிவித்தேன். அவற்றில் நிறைவேற்றப்பட்ட சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

- வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், ரெங்கநாதபுரத்தில் **புதிய ஆரம்ப சுகாதார நிலையம்** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- திண்டுக்கல் கஸ்தூரிபாய் மருத்துவமனையில் **செவிலியர் பயிற்சி பள்ளிக்கான கூடுதல் கட்டடம்** கட்டுப்பட்டுள்ளது.

- அம்மையநாயக்கனூர் சமுதாய சுகாதார நிலையத்தில் **நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம்** அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் **சி.டி.ஸ்கேன்** நிறுவப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

- பழனி அரசு மருத்துவமனையில் உள்ள ஆய்வகக் கூடத்திற்கு **நவீன மருத்துவ உபகரணங்கள்** வழங்கப்பட்டுள்ளன.

- ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு **டயாலிசிஸ் கருவிகள்** வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர, இந்த மாவட்டத்தில் **மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படுத்திய** திட்டங்களில் ஒரு சிலவற்றை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும், மற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன கிடைத்தது என்று அவதூறான பிரச்சாரத்தைத் தமிழ்நாடு முழுவதும் பரப்பி வருகிறார்கள். அவர்கள் கேட்டதற்கிணங்க, மக்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களுக்காக நிறைவேற்றியுள்ள திட்டங்களை எடுத்து வைக்கின்றேன்.

- குடிமராமத்து திட்டத்தின் கீழ், பழனி வட்டம், அ.கலையம்புத்தூர் கிராமம் ஒடையகுளம் மற்றும் அரசு வரத்து வாய்க்கால் புனரமைப்புப் பணிகள், ஆத்தூர் கிராமம், பீல்வெட்டி கண்மாயின் கரையை பலப்படுத்துதல்,

மதகுகள் சீரமைத்தல் மற்றும் செடி, கொடிகளை அகற்றும் பணிகள் உள்ளிட்ட **59** பணிகள் விவசாயப் பெருங்குடி மக்களின் பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டுள்ளன.

பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் வீணாகச் சென்று கடலில் கலக்காமல் அதனை தேக்கி வைப்பதற்காக முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதிலும் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் குறைபாடுகளைச் சொல்கிறார். எதிலாவது குறை காண முடியுமா என்று பூதக்கண்ணாடி வைத்து தேடிப் பார்க்கிறார். எப்படிப் பார்த்தாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குறைகளை காண முடியாது. நாங்கள் நிறையைத் தான் செய்து கொண்டிருக்கிறோம். இத்திட்டத்தின் கீழ், இந்த மாவட்டத்தில் மட்டும் **78** பணிகள் **44** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

- மக்கள் அரசை நாடி மனு கொடுப்பதற்கு பதிலாக அரசாங்கமே நேரடியாகச் சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களுடைய பிரச்சினையை தீர்ப்பதுதான் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் நோக்கம் ஆகும். இந்த மாவட்டத்தில் பெறப்பட்ட ஆயிரக்கணக்கான மனுக்களுக்கு மூன்றே மாதங்களில் தீர்வு கண்ட அரசு, எங்களுடைய அரசு. இத்திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் மூன்றே மாதங்களில் **1,612** முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் வைத்த கோரிக்கைக்கேற்ப, உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த முதியோர்களுக்கு மாதந்தோறும் **1,000** ரூபாய் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் **5** லட்சம் நபர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு கொடுத்தோம். தமிழ்நாடு முழுவதும் மூன்று மாதங்களில்

9,77,670 மனுக்கள் பெறப்பட்டன. அதில் தகுதி வாய்ந்த 5,22,660 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினருக்கு இது தெரியவில்லை. நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இவற்றை தெரிவிக்கின்றேன். மாநிலம் முழுவதும், மூன்றே மாதத்தில் சுமார் 2.50 இலட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்த அரசு எங்கள் அரசு.

- மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாணவச் செல்வங்கள் அறிவுப்பூர்வமான, விஞ்ஞானப்பூர்வமான கல்வி கற்க வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையோடு கொண்டு வந்த விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் மூலம், இந்த மாவட்டத்தில் மட்டும் சுமார் 35 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு தலா 12 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மடிக்கணினியை விலையில்லாமல் வழங்கியுள்ளோம். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் இதுவரை ரூபாய் 7,241 கோடி மதிப்புள்ள 51,67,019 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. வல்லரசு நாடுகளிலோ, இந்தியாவின் பிற மாநிலங்களிலோ இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அம்மா அவர்கள் தொடங்கிய திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.
- தமிழர்களின் பண்டிகையான பொங்கல் பண்டிகையை கொண்டாடுவதற்கு அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் பொங்கல் பரிசு ரூபாய் 1000 மற்றும் அரிசி, சர்க்கரை, ஏலக்காய், முந்திரி, திராட்சை, கரும்பு என பல்வேறு பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இதனையும் தடை செய்வதற்கு பலர் நீதிமன்றம் சென்றார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடு, நல்ல தீர்ப்பைப் பெற்று அனைத்துக் குடும்ப

அட்டைகளுக்கும் பொங்கல் பரிசு ரூபாய் 1000 வழங்கிய அரசு எங்கள் அரசு.

இது ஏழைகளின் அரசு. பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஏழைகளின் வாழ்வு மலர, அவர்களுக்கு ஏராளமான திட்டங்களை வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் தொடங்கப்பட்ட இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். அதனை, அம்மா அவர்கள் கண்ணை இமை காப்பது போலக் காத்து, ஏழை, எளிய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கினார்கள். அம்மாவுடைய அரசும் தொடர்ந்து பல நலத்திட்டங்க்ளை தொடர்ந்து வழங்கி கொண்டு இருக்கிறது. இந்தியாவில் இதுபோல் எந்த மாநிலத்தில் கொடுத்துள்ளார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், இந்த மாவட்டத்தில் மட்டும் 11,276 விவசாயிகளுக்கு 1000 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக வழங்கப்படுகின்றது. இதுபோன்ற திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் ஏழை மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு. இந்த மாவட்டத்தில் மட்டும், மாதந்தோறும், 35 ஆயிரம் நபர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

- கொடகு ஆற்றின் குறுக்கே ஐயம்பாளையம் மற்றும் அகரத்தில் இரண்டு தடுப்பணைகளும், சந்தானவர்தினி ஆற்றின் குறுக்கே மூன்று தடுப்பணைகளும் சுமார் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

- மேலும், ஆத்தூர் வட்டம் – சீவல்சரகு, ஒட்டன்சத்திரம் வட்டம் – விருப்பாச்சி, நத்தம் வட்டம் – முளையூர், நிலக்கோட்டைவட்டம் – கோனாம்பட்டி, பழனி வட்டம்–மாட்டுமந்தை போன்ற இடங்களிலும் தடுப்பணைகள் கட்டப்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- திண்டுக்கல் அக்கரைப்பட்டி ரயில்வே நிலையங்களுக்கு இடையில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

- திண்டுக்கல்–அனுமந்தநகரில் சுமார் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே மேம்பாலம் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- புளியம்பட்டி–பாலாறு சாலையில் உயர்மட்ட மேம்பாலம் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிங்கபுரம், ராஜவாய்க்கால் கால்வாய் புனரமைக்கப்பட்டு, விவசாய பெருமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- 7.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நத்தம் வட்டம், ராஜநேரி கால்வாய் புனரமைக்கப்பட்டுள்ளது.

- நத்தம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் 634 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரத்து 274 ஊரக குடியிருப்புகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் உள்ள மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற்று பயன் பெற்று வருகின்றனர்.

- 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 253 ஊரக குடியிருப்புகள் மற்றும் 2 பேரூராட்சிகள் பயன் பெறும் கீரனூார் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. விரைந்து முடிக்கப்பட்டு இந்தப் பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

- வடமதுரை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20 ஊரக குடியிருப்புகளில்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- வேடசந்தூர் பகுதியில் காவேரி கூட்டுக் குடிநீர் இரண்டாம் கட்ட திட்டத்தின்படி 155 கிராமங்கள் பயன் பெற்று வருகின்றன.

- வேடசந்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

- பொது மக்களின் வசதிக்காக, திண்டுக்கல் மாநகராட்சிக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

- நத்தம் பேருந்து நிலையம், சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பில் சீரமைக்கப்பட்டு, பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- பழனி ஆண்டவர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரியில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாகக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

- கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

- அரசின் சேவை மக்களுக்கு விரைந்து கிடைக்க, குஜிலியம்பாறையை தலைமை இடமாகக் கொண்ட புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- திண்டுக்கல் மாநகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் 63 ஊரக குடியிருப்புகளும், வேடசந்தூர் ஒன்றியத்தில் 84 ஊரகக் குடியிருப்புகளும், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் 38 ஊரக குடியிருப்புகளும் பயன் பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சுமார் 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழநியில் பிரசித்திப் பெற்ற முருகன் திருக்கோயில் அமைந்துள்ளது. பழநியில் சாலைகள் சீரமைப்பு, கழிவுநீர் வசதிகள், மின்கம்பங்கள் அமைத்தல், ஏரிகள், குளங்களை தூய்மைப்படுத்துதல் போன்ற பல்வேறு வசதிகளை அளிப்பதற்கு அம்மாவினுடைய அரசு ரூபாய் 58 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் நிறைவு பெற்றவுடன், திருப்பதி போல அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக பழனி முருகன் திருக்கோயிலிலும் திகழும்.

இது தவிர **இன்று நடைபெறும் இந்த விழாவில்**,

பொதுப் பணித் துறையின் சார்பில் 4 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பிலான சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணை உட்பட மொத்தம் 14 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்த 45 பணிகளை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைத்துள்ளேன்.

புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டியது உட்பட, 340 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

அதே போல, 25 ஆயிரத்து 213 பயனாளிகளுக்கு சுமார் 63 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்று வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

“**தமிழ்நாடு ஒவ்வொரு துறையிலும், இந்தியாவிலேயே முதன்மை நிலை பெற வேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாடு தான் சிறந்து விளங்க வேண்டும் என்பது எனது எண்ணம்! திட்டம்! செயல்பாடு!**

**அந்த இலக்கை நோக்கியே எனது தலைமையிலான அரசு புத்தம் புதிய திட்டங்களை புதுமையான உத்திகளோடு நிறைவேற்றி வருகிறது. இந்த முன்னேற்றப் பயணத்தில் நீங்கள் அனைவரும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம்! இதுவே எனது வேண்டுகோள்!**” என்றார் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

வறட்சி, வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிய அரசு, அம்மாவினுடைய அரசு தான். வறட்சிக் காலங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அம்மாவின் அரசு 2,247 கோடி ரூபாய் வறட்சி நிவாரணமாக வழங்கியது. அதேபோல, இந்த மூன்றாண்டுகளில் மட்டும் பயிர்க் காப்பீடு திட்டம் மூலம் விவசாயிகளுக்கு 7,702 கோடி ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்ததுள்ளது.

நுண்ணுயிர் பாசனத் திட்டம் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் விவசாயிகளுக்கு ரூபாய் 1,080 கோடி மானியம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

விவசாயிகள் பயிரிட்ட மக்காச்சோளம், அமெரிக்கன் படைப்புழுவால் தாக்கப்பட்டு பாதிப்பு ஏற்பட்டவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களுக்கு ரூபாய் 186.25 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கியுள்ளது. இந்த ஆண்டு

அமெரிக்கன் படைப்புழுவால் மக்காச்சோளப் பயிருக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க ரூபாய் 47.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் துறை மூலம் இலவசமாக மருந்து தெளித்து கட்டுப்படுத்தியுள்ளது. இதனால் விவசாயிகள் அமோக விளைச்சல் பெற்றதோடு அதிக வருமானமும் ஈட்டியுள்ளார்கள்.

சேலம் மாவட்டம், தலைவாசலுக்கு அருகில் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில், ஏறக்குறைய 1,100 ஏக்கர் பரப்பளவில் ஆசியாவிலேயே மிகப் பெரிய, பிரம்மாண்டமான கால்நடைப் பூங்கா ஒன்றை உருவாக்க இருக்கின்றோம். அந்தக் கால்நடைப் பூங்காவில் கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட்டு, நாட்டு இனக் காளைகள், நாட்டு இனப் பசுக்கள், ஆடுகள், கலப்பினப் பசுக்கள் உருவாக்கி விவசாயிகளுக்குத் தரவிருக்கிறோம். இதனால் அதிகளவில் பால் மற்றும் அதிக எடையுள்ள ஆடுகள் கிடைப்பதினால், விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைக்கும்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உள்ள மார்கெட் தான் மிகப் பிரசித்தி பெற்றதாகும். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஆங்காங்கே மார்க்கெட் அமைத்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். இதற்காக 10 மாவட்டங்களை தேர்வு செய்து, மத்திய அரசிடம் நிதியுதவி பெற்று, சுமார் 215 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மார்க்கெட் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டுமென்ற அடிப்படையில், ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி, மருத்துவம், பொறியியல், பாலிடெக்னிக் போன்ற ஏராளமான கல்லூரிகளைத் திறந்து கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியுள்ள அரசு அம்மாவின் அரசு. 2011–ஆம் ஆண்டு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது

34 சதவிகிதமாக இருந்த உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை, அம்மா அவர்கள் கல்வியில் ஏற்படுத்திய புரட்சி, மறுமலர்ச்சியின் விளைவாகவும், கல்விக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ததன் விளைவாகவும், அம்மா வழியில் அம்மா அரசு தொடர்ந்து எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகவும், தற்போது உயர்கல்விப் படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை 49.8 சதவிகமாக உயர்ந்துள்ளது.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்ததை போல, அம்மாவின் அரசும் கல்விக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ததன் காரணமாக இன்றைக்கு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. ஆக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படுத்தியதன் விளைவு, இன்றைக்கு தமிழகம் இந்தியாவிலேயே உயர்கல்வியில் முதலிடம் வகிக்கின்றது. இது மிகப் பெரிய சாதனை. எந்த ஒரு மாநிலம் கல்வியில் சிறக்கின்றதோ, அந்த மாநிலம் அனைத்து வளங்களையும் பெறும். அப்படிப்பட்ட வளங்களை பெறுவதற்காக எங்களுடைய தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை நாங்கள் சிந்தாமல் சிதறாமல் செயல்படுத்தி கொண்டு இருக்கின்றோம். மற்ற துறைகளை காட்டிலும் பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றைக்கு கல்வியில் தமிழகம் முதலிடம் வகிக்கின்ற சூழ்நிலையை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, மருத்துவத் துறையிலும் சாதனை படைத்து கொண்டு இருக்கின்றோம். இன்றைக்கு கிராமம் முதல் நகரம் வரை ஏழை எளிய மக்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக கிராமங்களில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார

நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அங்கேயே அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். அப்படிப்பட்ட வசதியும் செய்து தரப்பட்டு இருக்கிறது.

சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து 2011 வரை தமிழகத்திலே 1945 இடங்கள் தான் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம் படிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்பு 6 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை துவக்கி, 885 மாணவர்கள் கூடுதலாக சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, கூடுதலாக மாணவர்கள் மருத்துவம் படிக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் கேட்டு, பெற்று கடந்த ஆண்டு 350 இடங்கள் கூடுதலாக பெற்று தந்தது. தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே செயல்படும் அரசு ஒரே ஆண்டில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கியதன் மூலமாக 1650 மாணவர்கள் புதிதாக மருத்துவம் படிக்கலாம். ஆக மொத்தம் ஒன்றரை ஆண்டு காலத்திலே 2000 மருத்துவ இடங்களை உருவாக்கிய அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. இது ஒரு வரலாற்று சாதனை. இப்படிப்பட்ட சாதனை மேல் சாதனை படைக்கின்ற அரசு எங்களுடைய அரசு.

அரசு நிர்வாகம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற காரணத்திற்காக 5 புதிய மாவட்டங்களை உருவாக்கி தந்த அரசு அம்மாவுடைய அரசு. இவ்வளவு திட்டங்களையும் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு புற்றுநோய் வந்தால், இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்ய வேண்டி வரும். அப்படி செலவு செய்தால் தான் புற்றுநோயை குணப்படுத்த முடியும். அப்படிப்பட்ட நிலைமையை உணர்ந்த அம்மாவின் அரசு, அரசு மருத்துவக் கல்லூரியில் தலா 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 Linear Accelerator கருவிகள் அமைக்க

நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் புற்றுநோயை கண்டறிந்து குணப்படுத்தக் கூடிய சூழ்நிலையை எங்களுடைய அரசு உருவாக்கி கொடுத்திருக்கின்றது என்று சொன்னால் ஏழை எளிய மக்களை எந்த அளவிற்கு எங்களுடைய அரசு காப்பாற்றுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுபோல, புற்றுநோயை கண்டுபிடிக்கக் கூடிய PET CT Scan கருவி தலா 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கி இருக்கின்றோம். ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, மாவட்ட அரசு மருத்துவமனையாக இருந்தாலும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தனியார் மருத்துவமனைக்கு நிகராக கூடுதல் வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக உருவாக்கி தந்திருக்கின்றோம். அண்மையில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்தோம். அதில் தனியார் மருத்துவமனையை விட கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் தான் திண்டுக்கல் மாவட்டத்தில் கட்டப்படவுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், ஏழை எளிய மக்களுக்கு Heart Attack வந்தால் Stent வைத்து காப்பாற்றக் கூடிய அளவிற்கு அரசு மருத்துவமனைகளிலும் இன்றைக்கு கேத்லாப் கருவிகளை வழங்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். கடந்த 3 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு மட்டும் சுமார் 24 சிடி ஸ்கேன் கருவிகள், 17 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள், 18 கேத்லாப் கருவிகள், 658 டயாலிசிஸ் கருவிகள் ரூபாய் 221 கோடியே 11 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், ஏழை எளிய மக்கள் எந்தவித கட்டணமும் இன்றி மருத்துவக் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கி தந்திருக்கின்றோம்.

எதிர்க்கட்சி சேர்ந்தவர்கள் இந்த ஆட்சியில் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்கிறார்கள். பச்சை பொய்யை சொல்கிறார்கள். ஆகவே மக்கள்

எண்ணிப் பார்க்க வேண்டும். நாங்கள் இவ்வளவு திட்டங்களை கொடுத்திருக்கின்றோம். முத்து முத்தான திட்டங்களை நாங்கள் உங்களுக்காக செயல்படுத்தி கொண்டு இருக்கின்றோம்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவுடைய அரசு, இன்றைக்கு மக்கள் மனநிறைவு பெறுகின்ற அளவிற்கு அத்தனை திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், அரசு மருத்துவமனைகளில் தான் 70 சதவிகித பிரசவங்கள் நடைபெறுகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மருத்துவமனையை கொடுத்து, திறந்து வைத்திருக்கின்றோம். ஆகவே, தாய்மார்கள் பிரசவ காலத்தில் இந்த மகப்பேறு மருத்துவமனையில் பிரசவம் பார்த்து கொள்ளலாம். இன்றைக்கு தமிழ்நாட்டில் மருத்துவ காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 90 சதவிகித பணியிடங்கள் நிரப்பட்டு இருக்கின்றன. அம்மா வழியில் செயல்படும் அரசால் 31,616 மருத்துவ பணியிடங்கள் நிரப்பப்பட்டு இருக்கின்றன. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் சிறப்பான மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது என்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம்.

ஒவ்வொரு மருத்துவரையும் உருவாக்குவதற்கு மக்களின் வரிப் பணத்தை அரசு செலவழிக்கிறது. ஆகவே, மருத்துவர்கள் குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு சேவை செய்யும் உயரிய எண்ணம் கொண்டவர்களாக திகழ வேண்டும்.

**“அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை”**

அதாவது பிற உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்தை தம் துன்பம்போல் கருதி நீக்காவிட்டால் அறிவிருந்து என்ன பயன் என்றார் தெய்வப் புலவர்

திருவள்ளுவர். அரசு மருத்துவக் கல்லூரியில் குறைந்த கட்டணத்தில் பயின்று மருத்துவர்களாக வெளிவரும் மாணாக்கர்கள் சேவை மனப்பான்மையோடு மக்களுக்கு பணியாற்ற வேண்டும். இதுவே அவர்கள் அரசிற்கு செய்யும் கைமாறாக அமையும் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இம்மாவட்டத்தில் மக்கள் பயன்பெறும் வகையில், அரசினுடைய பரிசீலனையில் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. இங்கே மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்களும், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தேன்மொழி அவர்களும், டாக்டர் பரமசிவம் அவர்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்த கோரிக்கைகளை எல்லாம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது.

<u>அறிவிப்புகள்</u>

1. செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ஒரு உள் விளையாட்டரங்கம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

2. வட மதுரை ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

3. திண்டுக்கல் நகரத்தில் புதிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்கக வளாகம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

4. ஒட்டன்சத்திரம் வட்டம், தாசிரிபட்டி கிராமத்தில் பாலத்து ஓடை முதல் முத்துபாலசமத்திரம் வரை தடுப்பணை கட்ட வேண்டும் என்று

கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

5. முள்ளிப்பாடி கிராமத்தில்
சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே
ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என்று கோரிக்கை
வைத்திருக்கிறீர்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

இந்த அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து செய்யக் கூடிய ஒரே அரசு, அம்மாவுடைய அரசு. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய பிறகு முதன்முதலாக தேர்தலை சந்தித்த மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம். முதன்முதலாக இரட்டை இலை சின்னம் போட்டியிட்டதும் இந்த மாவட்டத்தில் தான். திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் முதன்முதலில் வெற்றி பெற்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கும் அடித்தளமாக அமைந்த மாவட்டம் திண்டுக்கல் மாவட்டம். ஏன் என்று சொன்னால், இங்கே வெற்றி பெற்ற பின்னர் தான் தமிழ்நாடு முழுவதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புகழ் பரவியது. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற வெற்றி மகத்தான வெற்றி. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மக்கள் செல்வாக்கை நிரூபித்த மாவட்டம் திண்டுக்கல் மாவட்டம்.

அப்படிப்பட்ட மாவட்டத்திலே, இந்த நிகழ்ச்சியிலே பேசுகின்ற நல்ல வாய்ப்பை உருவாக்கி தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்திற்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 30 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற ஒரே கட்சி அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். வேறு எந்த கட்சியும் 30 ஆண்டுகாலம் தமிழகத்தை ஆண்ட வரலாறு கிடையாது. அத்தகைய வரலாற்றை படைத்த இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். எப்பொழுதும் மக்களுக்காக பணியாற்றுகின்ற அரசு இந்த அரசு. ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக ஓய்வின்றி உழைக்கின்ற அரசு எங்கள் அரசு.

கொரோனா வைரஸ் பற்றி உலக நாடுகள் அனைத்தும் அறிந்திருக்கின்றது. 118 நாடுகளில் இந்த வைரஸ் பரவியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நம்முடைய பகுதியில் இந்த வைரஸ் இல்லை. இருந்தாலும் நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறை, பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு செய்திகள் வெளியிட்டுள்ளது. இந்த நோய் எப்படி வருகின்றது, அதற்கான அறிகுறிகள் என்னென்ன ? இதை பற்றியெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய பகுதியில் நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்கள் அருகில் இருக்கின்ற மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். இன்றைக்கு தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும், ஒருவருக்கு தான் கொரோனா வைரஸ் இருப்பதாக கண்டறியப்பட்டது. அவரும் குணமடைந்து கொண்டு வருகிறார். வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு தான் இந்த நோய் அறிகுறிகள் இருக்கின்றது. தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு இல்லை. இருந்தாலும், நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். எங்கே வெளியில் சென்று வந்தாலும் நமது கைகளை நன்றாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். எப்படி கைகளை சோப்பு போட்டு கழுவ வேண்டும் என்பதற்காக அரங்கு அமைக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இங்கே வந்திருக்கின்ற பொதுமக்கள் அத்தனை பேரும் அதை பார்த்துவிட்டு செல்லுங்கள். நீங்கள் இங்கிருந்து சென்று வீட்டிற்குள் நுழையும் முன், கை, கால்களை சுத்தமாக கழுவுங்கள்.

இதை எல்லாம் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். கொரோனா வைரஸ் இன்றைக்கு நாடு முழுவதும் பரவி வருவதாக சொல்லப்படும் நிலையில், நாம் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன், இந்த நோய் அறிகுறி தெரிந்தவுடன் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று முறைப்படி நீங்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டால், பூரண குணமடையலாம் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய அண்ணன் திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள், என்னுடைய அமைச்சரவையில் மூத்த அமைச்சர். என்னை பார்க்க வருகின்ற போது, நான் சோர்வாக இருந்தால், என்ன தம்பி சோர்வாக இருக்கிறீர்கள் என்று கேட்டு நகைச்சுவையாக பேசுவார். உடனே சோர்வு எல்லாம் நீங்கிவிடும். அத்தகைய ஆற்றல் படைத்தவர் அண்ணன் திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள். இங்கே எத்தனையோ பேர் பேசினோம், யாராவது ஒருவரால் உங்களை சிரிக்க வைக்க முடிந்ததா ? சிரிக்க வைக்கக்கூடிய ஆற்றல் படைத்த நபர் ஒருவர் எங்களுடைய அமைச்சரவையில் என்றால் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் தான். அவர் எங்கள் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, எங்கள் அமைச்சரவை வலிமையோடு இருக்கின்றது. மக்களுக்கு சேவை செய்வதில் ஆற்றலோடு செயல்பட்டு கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் ஒரு மாநாட்டை போல இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றார். இதை பார்க்கின்ற போது உண்மையிலே ஆச்சர்யப்பட்டேன். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை மிஞ்சுகின்ற அளவிற்கு இந்த அரங்கமே நிரம்பி வழிகின்ற காட்சியை பார்க்கின்றேன். வரும் போது மூன்று இடங்களில்

வரவேற்பு அளித்தார்கள். அந்த கூட்டத்தை பார்த்தீர்களானால் இதைவிட ஒன்றரை மடங்கு அதிகம். ஆகவே, அற்புதமான இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அண்ணன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற வழியில் கரும்பு தோட்டத்தையும் வயலையும் காண்கின்ற காட்சியை பார்த்தேன். கரும்பு தோட்டத்தையும் கொண்டு வந்து விட்டார், வயலையும் கொண்டு வந்து விட்டார். அப்படி இயற்கையான சூழலை உருவாக்கக் கூடிய வனத்துறையை அவர் பெற்றிருக்கின்றார். இயற்கை வளம் தமிழகத்தில் செழிக்க வேண்டும், வனவளம் சிறக்க வேண்டும். வனம் செழித்தால் தான், நல்ல மழை பெய்யும். அப்படி இயற்கையோடு ஒன்றியிருக்கின்ற அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு துணை நின்ற சகோதரர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி, சீரோடும் சிறப்போடும் அமைவதற்கு துணை நின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவர் துணை நின்ற துறையின் செயலாளர் அவர்களுக்கும், உடனடியாக நிலத்தை பெற்று தந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. உதயகுமார் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், வருவாய் துறை மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கும், இந்த திட்டம் வருவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**